செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023 – 11.12.2023)
மொழிகள் பல;உணர்வு ஒன்றே

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

நடத்தும்

# இந்திய மொழிகளில் இராமாயணம் – ஒப்பாய்வு

# Ramayana in Indian Languages - Comparative Study

## தேசியக் கருத்தரங்கம் - 1
## (National Seminar - 1)
## [20.11.2023 - 21.11.2023]

இந்திய இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் தொன்மையானவை, முதன்மையானவை. இவ்விரண்டும் பல்வேறு மொழிகளில் எழுதப்பெற்றுள்ளன. இவற்றுள் இறையியல் மானுட வாழ்வியல் என இருநிலைகளில் உயர்ந்த கோட்பாடுகளோடு விளங்கும் இராமாயணம் குறித்த ஒப்பாய்வுக் களத்தில் மொழிகள் பள்ளி, மொழிக்கல்வியியல் மற்றும் மொழித் தொழில்நுட்பப் புலம் தேசியக் கருத்தரங்கம் ஒன்றினை ஆய்வுமாணாக்கர்கட்கு நடத்த திட்டமிட்டுள்ளது. இராமாயணங்களுள் வடமொழியில் இயற்றப்பெற்ற வால்மீகி இராமாயணமும், தமிழில் தோன்றிய கம்ப இராமாயணமும் மிகச் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்பெறுவன. இவ்விருமொழிகளில் மட்டுமல்ல, இந்திய மொழிகள் பலவற்றிலும் இராமகாதை எழுதப்பெற்றுள்ளது. தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம், இந்தி, அசாமி, ஒடியா, மராத்தி, வங்காளி, காஷ்மீரி என கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை இந்திய மொழிகள் அனைத்திலும் எழுதப்பெற்றுள்ளன. இவை, மொழிபெயர்ப்பாகவும், தழுவலாகவும், அம்மொழிக்குரிய தனித்துவத்தோடு அமைக்கப்பெற்றுள்ளன. இந்த இராமகாதை ஒவ்வொரு மொழியிலும் மேற்குறிப்பிட்ட முதன்மை இதிகாசங்களோடு கதை, கதாபாத்திரம், இலக்கிய வளம் ஆகியவற்றால் ஒன்றுபட்டும், பண்பாடு, கலாச்சாரம், சமயம், மொழியமைப்பு ஆகியவற்றால் மாறுபட்டும் காணப்பெறுகின்றன. இவற்றிடையே நிலவும் பொதுமைப்பண்புகளும் பலவுள. இவற்றை ஆய்வு

மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கும் முயற்சியில் இக்கருத்தரங்கம் முன்னெடுக்கப் பெறுகின்றது.

ஆய்வு மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் வகையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சமஸ்கிருதம், ஒடியா, அசாமி, பெங்காலி போன்ற தென்னிந்திய, வட இந்திய மொழிகளில் தோன்றியுள்ள இராமாயணங்களை அறிமுகப்படுத்தியும் ஒப்பீட்டும் இருமொழி அறிஞர்களால் ஆய்வுரைகள் அமையவிருக்கின்றன.

இந்திய மொழிகள் பலவாக இருப்பினும் அவற்றினிடையே இழையோடும் மொழிக்கூறுகள், இலக்கிய வளங்கள், பண்பாடு, கலைகள் ஆகியவற்றின் பரிமாணத்தினை உணர்த்துவதாக இக்கருத்தரங்கம் 20.11.2023 - 21.11.2023 ஆகிய இருநாட்கள் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெற ஆய்வு மாணவர்களைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கின்றது.

விதிமுறைகளும் விவரங்களும்

1. பங்கேற்பாளர்கள் தமிழியல் சார்ந்த ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம், முனைவர் பட்ட மேலாய்வு மாணவராக இருக்க வேண்டும்.
2. பங்கேற்புக் கட்டணம் ஏதும் கிடையாது. கருத்தரங்கில் கலந்துகொள்ளும் ஆய்வு மாணவர்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.
3. பங்கேற்கும் ஆய்வு மாணவர்களுக்கு மத்திய அரசின் விதிமுறைப்படி நாட்படி, பயணப்படி வழங்கப்படும்.
4. நிறுவனத்தின் சார்பில் மதிய உணவு, தேநீர் வழங்கப்படும். தங்குமிடத்தைப் பங்கேற்பாளர்களே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.
5. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் புலனம் வழியாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
6. பதிவுப் படிவம் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: workshoplle@cict.in
7. பதிவுப் படிவம் வந்து சேர வேண்டிய இறுதி நாள்: 15.11.2023 (மாலை : 5.00 மணி)
8. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 30

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

Chennai - 600 100

## School of Languages and Language Education & Language Technology

**இந்திய மொழிகளில் இராமாயணம் – ஒப்பாய்வு**

*Ramayana in Indian Languages - Comparative Study*

**NATIONAL SEMINAR** **APPLICATION** **20.11.2023 - 21.11.2023**

Name ____________________

DOB ____________________

Gender ☐ Men ☐ Women ☐ Transgender

Category ☐ General ☐ OBC ☐ SC/ST

Educational Qualification ____________________

Research Scholars (MPhil., / Ph.D.,/ PDF) ____________________

Research Topic ____________________

____________________

University / College / Institute with Address (Phone and E-Mail) ____________________

____________________

____________________

Residential Address (Phone and E-Mail) ____________________

____________________

____________________

WhatsApp No. ____________________

Date:

Place: (Signature)

Head of The Department / Research Supervisor
(Signature with Seal)